# நாட்டின் எதிர்கால வளர்ச்சித் திட்டங்களுக்கான சிறந்த அடையாளம் எம்.ஆர்.டி. - நஜிப்

கோலாலம்பூர்,டிச.16–

எம்.ஆர்.டி. பயணத் திட்டம் நாட்டின் வளமான வளர்ச்சித் திட்டங்களின் வெற்றியைச் சித்திரிக்கும் சிறந்த அடையாளமாக விளங்குகிறது என்று பிரதமர் டத்தோஸ்ரீ நஜிப் துன் ரசாக் தெரிவித்தார்.

நாட்டின் பயணச் சேவைகளில் புதிய நுட்பத்திற்கான தொடக்கமாக அமைந்திருக்கும் இந்த எம்.ஆர்.டி. போக்குவரத்து முறையையே மாற்றியமைக்கும் பிரதானத் திட்டமாக அமைந்திருக்கிறது.

இந்தத் திட்டம் வெறும் போக்குவரத்து அம்சமாக மட்டுமே விளங்கவில்லை. மாறாக மக்கள் நலனை முக்கிய இலக்காகக் கொண்டு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. மக்களின் வாழ்க்கை நிலை, தொடர்பு முறைகள், மக்கள் நெரிசல் மிகுந்த இடங்கள்,



போக்குவரத்து சௌகரியங்கள், பயனீட்டாளர்களின் தேவை உள்ளிட்ட பல்வேறு அம்சங்களைக் கருத்தில் கொண்டு இந்தத் திட்டம் மேம்படுத்தப்பட்டிருக்கிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக அனைத்து பயணத் தொடர்புமுறைகளும் சிறப்பான வகையில் சீரமைக்கப்பட்ட ஓர் உன்னதப் போக்குவரத்து முறையாக இது அமைந்திருக்கிறது என்று அவர் கூறினார். தமது நஜிப் ரசாக் அகப்பக்கத்தில் நேற்று அவர் இந்தக் கருத்துகளைப் பதிவு செய்தார்.

சுங்கை பூலோ - காஜாங்கை இணைக்கும் எம்.ஆர்.டி. திட்டத்தின் முதல் கட்டப் பயணத்தை நேற்று அவர் தொடக்கி வைத்தார். மொத்தம் 12 நிலையங்களை இந்த முதற்கட்டப் பயணத் திட்டம் உட்படுத்தி இருக்கிறது.

இந்தப் பன்னிரண்டு ரயில் நிலையங்களுக்கும் அருகிலுள்ள பேருந்து நிலையங்களுக்கும் பயணச் சேவைகளை வழங்க 112 பேருந்துகளும் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன.

-பெ-